
# ஆரையம்பதியும் ஆலயங்களும்



பதியூரான்
ச.ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதியும் ஆலயங்களும்























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | - | "ஆரையம்பதியும் ஆலயங்களும்" |
| ஆக்கியோன் | - | பதியூரான் ச.ஜெயந்தன் |
| மொழி | - | தமிழ் |
| முதற்பதிப்பு | - | 2009 |
| பதிப்பு விபரம் | - | முதல் பதிப்பு |
| தாளின் தன்மை | - | 70gsm |
| நூலின் அளவு | - | A5 |
| அச்சு எழுத்து அளவு | - | 14 |
| மொத்த பக்கங்கள் | - | 52 |
| அட்டை வடிவமைப்பு | - | எஸ்.ரமணன் |
| கணனி வடிவமைப்பு | - | ஏ.ஜெயலக்ஷ்மி |
| அச்சிட்டோர் | - | வணசிங்கா பிரிண்டர்ஸ் திருமலைவீதி, மட்டக்களப்பு |
| நூலின் விலை | - | ரூ. 200.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோருக்கு சமர்ப்பணம்

ஆரையம்பதியிலே பிறக்க வைத்து
        தமிழோடு பாலும் ஊட்டி
நற்சொல்லோடு கவியும் தந்து
        என்னை வளர்த்தெடுத்த பெற்றோரே

கல்விக் கொடையை எனதாக்க
        இறைவனோடு பக்க துணையாய் இருந்து
ஆசானோடு சேர்ந்து கல்வியும் தந்து
        என்னை காத்து நின்ற பெற்றோரே

இருளிலே வெளிச்சமாய்
        துன்பத்தில் இன்பமாய்
நிலையிலே உறுதியாய்
        கை கொடுத்த பெற்றோரே

அன்பு தந்து அரவணைத்து
        அறிவுதந்து வழிகாட்டி
பண்பு தந்து பண்பாளனாக்கி
        என்னை ஆளாக்கிய பெற்றோரே

நற்பண்போடு தமிழும் செறிந்து வாழும் ஆரையம்பதியிலே ஜெயந்தன் ஆகிய என்னைப் பிறக்க வைத்து கல்வி தந்து வளர்த்து ஆளாக்கிக் கொண்டிருக்கும் என் அன்புத் தெய்வங்கள் திரு.க.சந்திரசேகரம், திருமதி.ச.தனலெட்சுமி அவர்களுக்கும் "ஆரையம்பதியும் ஆலயங்களும்" என்ற கவித் தொகுப்பு நூலை என் அன்புக் காணிக்கையாய் சமர்ப்பிக்கின்றேன்.

பதியூரான்
**சந்திரசேகரம் ஜெயந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**தற்புருச சிவாச்சாரியார் பிரதம குரு சிவஸ்ரீ கணேச சோதிநாதக் குருக்கள்**

அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
நெஞ்சமதில் அஞ்சேல் என வேல் தோன்றும்
நெஞ்சில் ஒருகால் நினைக்கையில் இருகாலும் தோன்றும்
முருகாஎன்று ஓதுவார் முன்

கிழக்கு மாகாணத்தின் பழம் பெரும் பதி என்றும் வரலாற்று ரீதியாக இறை புகழ் பொழிந்து இறை நாமமும் தவழ்கின்றதோடு கலைப்பதியாகவும் ஆரையம்பதி தலை சிறந்து விளங்குகின்றது. இவ் ஊரிலே தொன்று தொட்டு பண்டைக்காலம் முதல் இன்றுவரை எமது இந்து மதத்தின் பாரம்பரியமான கலாச்சார விழுமியங்களை இசை,இயல்,நாடகம் எனும் முத்தமிழ் மூலம் வெளிப்படுத்திய பல நூலாசிரியர், பாடகர்கள், நாடக எழுத்தாளர்கள் பல இலக்கிய மேதைகள் நிலையாய் வாழ்ந்து வந்தார்கள்.

இதில் முன்மாதிரியாக விளங்கிய "குந்தியின் மடியில்" எனும் நாடகத்தில் 'வீமன்' கதாபாத்திரமேற்றவரும் கிழக்கு மாகாண மக்கள் மன்ற தலைவராகவும், மண்முனைப்பற்று சகவாழ்வுக் குழுத் தலைவரா கவுமிருந்து பல சமூக சேவைகள் செய்தவரும் கட்டுரை,பேச்சு,விவாதம் எனப்பல மேடைகளில் போட்டியிட்டு பரிசில்களை வென்றவரும் அதுமட்டுமல்லாது ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தேர்த் திருப்பணிக்காக "கோயிலூரின் சிறப்பே பெருஞ்சிறப்பு" எனும் ஒலிப் பேழையை வெளியிட்டவரும் தற்போது "ஆரையம்பதியும் ஆலயங்களும்" எனும் நூலை உருவாக்கியவருமான எழுத்தாளர் "பதியூரான்" சந்திரசேகரம் ஜெயந்தன் என்றும் எமது இந்துமதத்தின் வெளிப்பாட்டையும் எமது ஊரின் சிறப்புத் தன்மையையும் இன்னும் பல புத்தகத்தின் வாயிலாக வெளியிட வேண்டும். எமது சமயத்திற்கும் சமூகத்திற்கும் ஒரு சிறந்த ஒளி விளக்காய் அமைய வேண்டுமென்று எனது அருளாசியை வழங்குகின்றேன்.

**இவ்வண்ணம்**
**தற்புருட சிவாச்சாரியார்**
**பிரதமகுரு சிவஸ்ரீ கணேசசோதி நாதக்குருக்கள்**
**ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்,**
**ஆரையம்பதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**பூ.பிரசாந்தன்**
**கௌரவ முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர்.**

அருள்வளமும் கலை,கல்வி வளமும் பெருக்கெடுத்து ஓடும் கடல் வாவிவளமும் நிறைந்த அழகு நிறை அறிவுப்பதியாக ஆரையம்பதி. கலை இலக்கியங்கள் நிறைந்த கலைப் பதியாகவும் திகழ்கின்றது. அதற்கு உதாரணமாக கூத்துக்கலை, நாடகம், சிறந்த எழுத்தாளர்கள் என்ற வரிசையில் இயல்,இசை,நாடகம் எனும் முத்தமிழும் சிறந்து விளங்கி காணப்பட்டது.

தற்போது தம்பி பதியூரான் ச.ஜெயந்தன் கலை எனும் மாபெரும் உலகிற்குள் காலடி வைத்துள்ளார். இவர் அண்மையில் ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தேர்த் திருப்பணிக்காக "கோயிலூரின் சிறப்பே பெருஞ்சிறப்பு" எனும் ஒலிப் பேழையை வெளியிட்டிருந்தார் இந்நிகழ்விலே நானும் கலந்து கொண்டேன். தற்போது "ஆரையம்பதியும் ஆலயங்களும்" எனும் நூலை உருவாக்கியுள்ளார். எமது கட்சியின் ஆட்சிக்காலம் நிலைக்கும் வரை பழம் பெரும் கலைஞர்களை கௌரவிப்பதிலும் தம்பி பதியூரான் ச.ஜெயந்தன் போன்ற இளம் கலைஞர்களை ஊக்குவித்து உதவியும் செய்து பிற்போக்கு அடைந்து வரும் கலை இலக்கியத்தை எமது ஊர் ஆரையம்பதியில் மட்டுமல்லாது முழு கிழக்கு மாகாணத்திலும் நிலைநாட்டுவேன் அருள் தரும் எல்லாம் வல்ல இறைவனை மனதிலே நிறுத்திக் கொண்டு "ஆரையம்பதியும் ஆலயங்களும்" எனும் நூலின் எழுத்தாளர் அவர்கட்கும் எனது மனப்பூர்வமான ஆசிர்வாத செய்தியை வழங்குகின்றேன்.

**இவ்வண்ணம்**
**பூ.பிரசாந்தன்**
**கௌரவ முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஸ்ரீ கண்ணகி, ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் வாழ்த்துச் செய்தி

### "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது சான்றோர் திருவாக்கு. அதற்கு அமைவாக ஈழமணித் திருநாட்டின் கிழக்கிலங்கையின் கண்ணே மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம் பெரும் பதியாம் ஆரையம்பதியில் திருக்கோயில்கள் வழிபாட்டிற்குரிய இடம். இந்துக்களின் வழிபாட்டு முறை தொன்று தொட்டு பல தெய்வ வடிவங்களில் நிலவி வருவதை இங்கு நாம் காணலாம். இன்னும் சில ஆலயங்கள் புதிதாக அமைந்து எழிலுற்று இருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் "ஆரையம்பதியும் ஆலயங்களும்" என்ற இந்த புதிய நூல் வடிவத்தினை சிரஞ்சீவி.ச.ஜெயந்தன் அவர்கள் அவரது தனிப்பட்ட அயராத முயற்சியினால் வெளிக்கொணர்ந்திருப்பது பாராட்டத்தக்கது.

ஆரையம்பதியின் அளப்பெருங் கருணை கொண்ட தெய்வங்களின் ஆலய தன்மைகளும் வரலாற்று உண்மைகளும் இவரது கவித்துவத்தின் மூலம் வெளிப்பட்டிருப்பது இவரது ஊர்ப்பற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு இன்னும் இளைஞர்கள் சமயத்தில் ஆர்வத்துடன் உள்ளனர். என்பதற்கு இது ஓர் உதாரணம். இவரைப்போல் இன்னும் பல இளைஞர்கள் இவருக்கு உறுதுணையாக முன்வரவேண்டும். வருங்காலத்திலும் இளைஞர்கள், மாணவர்கள், பெரியோர்கள் என அனைவருக்கும் பயன்படக் கூடிய வகையில் சைவசயத்தின் பல தத்துவங்களை, விளக்கங்களை வெளிக்கொணரக் கூடிய மாதாந்த சஞ்சிகைகளை இவர் வெளியிட முன்வரவேண்டும். அதற்கு சமய ஆர்வலர்கள் உறுதுணை புரிய வேண்டும் என்பது எமது பேரவா ஈழத்திருநாட்டில் "இந்துக் கலைக் களஞ்சியம்" எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதோ அவ்வாறு ஆரையூரில் இந்த "ஆரையம்பதியும் ஆலயங்களும்" நூல் முக்கியத்துவம் பெறுகிறது. இவரது இந்த அயராத முயற்சிக்கு தெய்வங்கள் அனைத்தும் அருள்புரிய வேண்டி எமது ஆலய பரிபாலன சபை வாழ்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஊர் வரலாறுகளையும், ஆலயவரலாறுகளையும் கட்டுரைகளாகவோ? கவிதைகளாகவோ? வெளியிடுவது காலத்தின் தேவையாகும். வருங்கால ஆய்வாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் பயன்படக்கூடிய ஆவணங்களாகும். இந்தவகையில் ஆரையம்பதியிலுள்ள ஆலயங்கள் பற்றி பல கவிதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இதற்கு முன்னோடி நல் அழகேசமுதலியார், பின்னர் சி.க.பொன்னம்பலம், க.நல்லலிங்கம், போன்றவர்கள் வெளியிட்டுள்ளனர். இவர்களை பின்பற்றி நமது இளம் எழுத்தாளர் பதியூரான் செல்வன் ச.ஜெயந்தன் அவர்கள் "ஆரையம்பதியும் ஆலயங்களும்" என்னும் நூலை வெளியிட்டுள்ளார். ஏனைய இளந்தலை முறையினருக்கும் ஒரு முன்மாதிரியாகும்.

இவரின் பூட்டனார் கந்தவனம் என்பவரும் ஒரு வரகவியாகும். பேச்சுத்தமிழில் சந்த ஓசையுடன் பாடிய பாடல்கள் சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியின் கவிதை வரிகளை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. வேகமாக வந்து ஒரு கிழவியின் முதுகில் மோட்டார் சைக்கிளை விட்ட நிகழ்ச்சியும், சைக்கிள் ஓட்டியை பொதுமக்கள் தாக்கியதையும் கண்டு உணர்ச்சி வசப்பட்டு பாடிய பாடலின் சில வரிகளை இங்கு தருகிறேன்.

*"கூனென்ற கிழவியின் முதுகிலே – வெளவால்*
*குறுக்காலே ஓட்டினான் வைசிக்கிள்*
*சட சட சட சட என்று – அந்த*
*சத்தா சமுத்திரச் சனத்துக்குள்*
*அடிபுடி அடிபுடி என்றுமே – மக்கள்*
*அம்புட்ட கம்போடு வந்தார்கள்"*

பூட்டனார் கந்தவனத்தின் வழிவந்த நூலாசிரியர் ஜெயந்தன் அவர்கள் பதியூரான் என்ற புனை பெயரில் பல சமூக ஆக்க வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறார். இவரின் கவிதை வசனகவி, புதுக்கவி, மரபுக்கவி எனப்பல உடல்களை எடுத்திருந்தாலும் உயிர் ஒன்றாகவே காணப்படுகிறது. இவரின் கவிதைகளில் அடங்கியுள்ள விழுமியங்கள் நிகழ்கால வருங்கால மக்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகவே உள்ளன. இவரது கவிதைகளில் உள்ளத்தை தொடும் சில வரிகளும் உள்ளன. உதாரணமாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மயிலேறும் மயிலோனே சித்திர வேலாயுத பெருமானே*
*மயிலழகு உன் அழகு ஊருக்கே நீயழகு*
*பாலகனே பாருக்கெல்லாம் பகலோனே*
*பார்வதி மைந்தனே ஆரையூர் நாதனே"*

இவ்வாறு ஆரையம்பதியிலுள்ள அத்தனை கோயில்களையும் உள்ளடக்கியிருப்பது ஒரு சிறப்பு நிகழ்வாகும். பல நூற்றாண்டுகளைக் கடந்த கந்தசுவாமி கோயில் தொடக்கம் அண்மையில் உருவான ஆஞ்சநேயர் கோயில் வரை இருபதுக்கு மேற்பட்ட ஆலயங்கள் பற்றி மட்டுமல்லாமல் இங்குள்ள மக்களின் குடி மரபுகளையும் தொட்டுக் காட்டியுள்ள ஒரு சிறப்பு நிகழ்வாகும்.

எனவே இந்நூலை எழுதி வெளியிட்டுள்ள பதியூரான் செல்வன் ச.ஜெயந்தன் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது இவரைப் பின்பற்றி ஏனைய இளைஞர்களும் கலை இலக்கிய வாதிகளாய் மாற வேண்டும்.

**மு.கணபதிப்பிள்ளை(மூனாக்கானா)**
**கந்தசுவாமி கோயிலடி**
**ஆரையம்பதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எண்ணங்கள் பல தோன்றி நாகரீக போக்கு மேலோங்கி நிற்கும் கால கட்டத்தில் மதம் கூறும் நல்லொழுக்கம் குன்றிப் போகையில் கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் நித்திலமாய் சிறப்புற்று விளங்கும் ஆரையம்பதி ஆலயங்கள் நிறைந்தும் பண்பாடு செறிந்ததுமான பழம் பெரும் பதியாய் காட்சியளிக்கின்றது. எவ்விடம் சென்றாலும் பதியூரில் இறை நாதத்தைத்தான் என் செவி உணர்ந்தது என்னால் உணரப்பட்ட இறை நாதம் என் மனதில் பெரும் பதிப்பாய் பதிந்தது. ஆரையம்பதியிலே உள்ள அனைத்து ஆலயங்களையும் ஒன்று சேர்க்க விரும்பினேன். என்னுள் எழுந்த உணர்வு வரிகளைக் கொண்டு "ஆரையம்பதியும் ஆலயங்களும்" என்ற கன்னி கவித் தொகுப்பை நூல் வடிவில் உங்கள் கைகளில் விரிக்கின்றேன்.

இறைவன் துணை கொண்டு என்னால் முடிந்த இலகு தமிழிலே எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் இந்த கவிவரிகளை தனதாக்கி நூல் வடிவில் வடித்திருக்கின்றேன்.

*கன்னி கவிதை எழுத நினைத்தேன்*
*எண்ணங்கள் எல்லாம் என் ஊர் ஆலயங்களை*
*- மனம் திறந்து பார்த்தது*
*பண்போடு நற்தமிழும் தலை நிமிர்ந்து*
*- பேச வைத்தது*
*இறையோன் நினைத்தானோ என்னை கவி பாடி*
*-துதி என்று*
*நானும் மெட்டு விரிந்த மலராய்*
*"ஆரையம்பதியும் ஆலயங்களும்" நூலாய்*
*உங்கள் கைகளில் பக்தி மணம் வீசும்*
*கவித் தொகுப்பு மலராய் மலரவைத்துள்ளேன்.*

நான் கலை இலக்கிய ஆர்வலனாய் மாறியதிற்கும் "ஆரையம்பதியும் ஆலயங்களும்" எனும் கவித் தொகுப்பு நூலை உருவாக்குவதற்கு காரணமாய் இருந்தவையை இப்போது நினைத்தால் கூட வேதனையாக இருக்கின்றது. ஏழாம் தரத்திலஆரையம்பதி இராமகிருஷ்ன மிஷன் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது "குந்தியின் மடியில்" என்ற நாடகத்தில் "வீமனாக" கதாபாத்திரம் ஏற்றேன். அந்த நாடகமும் பாடசாலை மட்ட பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் முதலிடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண ரீதியில் கலந்து கொள்ள சந்தர்ப்பமும் கிடைத்தது. நாங்களும் மிக்க மகிழ்ச்சியோடு வவுனியா செல்வதற்கு தயாராகி இருந்தோம். என் சக பாடிகளுடன் தோளிலே ஆடைகளை சுமந்த பையுடன் பஸ்சிற்காய் காத்திருந்தேன். சில குளறுபடிகள் காரணமாக நாங்கள் வவுனியா செல்ல வேண்டிய வாய்ப்பை இழந்தோம். வாடிய முகத்துடன் வீடு திரும்பினோம் சிறு வயதிலே என்னை பலமாக உள ரீதியான பாதிப்பை இந்த நிகழ்வு ஏற்படுத்தியது.

அந்த நேரத்தில் எங்களது பாடசாலையில் தமிழ் மாணவர் மன்றம் நடத்துவது வழக்கம் அதில் மாணவர்கள் கலந்து கொண்டு முத்தமிழில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து நடித்து அல்லது படித்து அரங்கேற்ற வேண்டும். எங்களது வகுப்பின் சந்தர்ப்பமும் வந்தது என்னால் உருவாக்கப்பட்ட "வவுனியா செல்லாத பாண்டவர்கள்;" என்ற நாடகத்தை அரங்கேற்றினோம். அன்று தொடக்கம் இன்றுவரை என்னை பாதித்திருந்த வேதனை கலை இலக்கிய பிரியனாய் மாற்றியது. அண்மையில் ஆரையம்பதி தேர் நிதிக்காக "கோயிலூரின் சிறப்பே பெரும் சிறப்பு" எனும் ஒலிப் பேழையை என் நண்பன் சாமித்தம்பி பிரதீப் உதவியோடு வெளியிட்டேன். இப்போது உங்கள் கைகளில் நான் பிறந்த மண்ணோடு நற்தமிழ் தந்த பெற்றோரோடு "ஆரையம்பதியும் ஆலயங்களும்" எனும் கவித் தொகுப்பை நூல் வடிவில் வெளியிடுகின்றேன்.

**என்றும் உங்கள் பதியூரான்**
**ச.ஜெயந்தன்,**
**இராஜதுரைக்கிராமம்,**
**ஆரையம்பதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. தமிழ் மொழியும் ஆரையம்பதியும் ........................................................

2. ஆரையூர்க்கந்தன்........................................................................

3. அருள் தரும் கண்ணகி அம்மன்.......................................................

4. விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர்...................................................

5. கிழக்கு பக்க சிவபெருமான்...............................................................

6. பௌர்ணமித்தாயாய் காளி அம்பாள்..................................................

7. பாங்குடனே பரமநயினார்..................................................................

8. பல மூர்த்தமாய் வைரவர்...................................................................

9. மகமாயி மாரியம்மா.............................................................................

10. பள்ளயத்துப் பேச்சியம்மன்....................................................................

11. அவதார புருஷ்சராய் நரசிங்கர்..........................................................

12. வீரத்தின் சிகரம் ஆஞ்சநேயன்.........................................................

13. காத்தருளும் நாகதம்பிரான்...............................................................

14. குழல் ஊதும் கண்ணன்......................................................................

15. அழகு தரும் மதுரை வீரன்..................................................................

16. குடி மரபும் திருவிழாக்களும்..............................................................

17. கூத்துக்கலையும் ஆரையம்பதியும்.......................................................

18. ஆரையம்பதியும் ஆயுர்வேத வைத்தியமும்.........................................

19. ஆரையம்பதியும் திருமந்திரமும்.........................................................


20. பெரும்பதியாய் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்.........


21. சமாதானம்வேண்டி இறைவனோடு.....................................................






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் ஆரையம்பதியும்

அருள் புகழும் தமிழ் மொழியும்
கலந்தது எம் ஊர்
வங்கக் கடல் எதிரே வாவியுமே
வளைந்தாடுவதுவும் எம் ஊர்
ஆலயங்களும் பண்பாடுகளும் நிறைந்ததுவும் எம் -ஊர்

சொல்லிக் கொடுக்க பள்ளிக் கூடங்கள்
நிழலாய் நிற்பதுவும் எம் ஊர்
செந்தமிழுக்கு செங்கோல் சேர்த்தவர்களும்
பல முழு நிலவு கண்ட கலைஞர்களும்
வாழ்ந்ததுவும் எம் ஊர்

வார்த்தையிலே இயல்பான நகைச்சுவையும்
வாழ்க்கையிலே தலைசிறந்து வாழ்பவர்களும்
பாங்குடனே இருந்ததுவும் எம் ஊர்
பார் புகழும் என் பதியான் நாசாவிலும்
அரச சேவைதனில் தன்னிறைவாய் இருப்பதும் எம் ஊர்


உலக நாச்சியின் ஆட்சியும்
மண்முனைப் பற்றின் எளிச்சியும்
ஓங்கியிருந்ததும் எம் ஊர்
கிழக்கிலங்கை தேன் பாடும் நாட்டின்
மீன் பாடுவதும் எம் ஊர்

வேல் கொண்டு வடம் பூட்டி
கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர்
தேரோட்டத்திற்கு உயிர் ஓட்டம் வழங்குவதும் எம் ஊர்
பதியகங்கள் இடமெல்லாம் பரந்து நிற்பதுவும்
கலையாத கல்வி நிலையாய் இருப்பதுவும் எம் ஊர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்



# ஆரையம்பதி ஸ்ரீசித்திரவேலாயுதர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையூர்க் கந்தன்

பதியூர் நாயகா வேல்தனை ஏற்ற வேலவா
எங்களுக்கு நீயே பெரும் அழகையா
ஆரையம்பதி நடுவில் அமர்ந்து பெரும் பதியானே
பாங்குடனே பாரேல்லாம் காப்பாயே

குறிஞ்சி நில குமரோனே
உலகெல்லாம் நிறைந்தவரே
திகட்டாமல் தேனருள் தருபவரே
எங்களூர் குகநேசச் செல்வனே

மயிலேறும் மயிலோனே சித்திர வேலாயுதப் பெருமானே
மயிலழகு உன் அழகு ஊருக்கு நீயழகு
பாலகனே பாருக்கெல்லாம் பகலோனே
பார்வதி மைந்தனே ஆரையூர் நாதனே


சரவணப் பொய்கை சரவணனே எங்களூர் குமரேசனே
பேரருள் தரும் குகநேசச் செல்வனே
மயிலேறி மாங்கனி கேட்டவா
வரம் வேண்டி நாங்கள் வந்தோமையா

பிரணவப் பொருள் புகட்டிய பிரணவநாதனே
எங்கள் புண்ணிய தீர்த்த நாயகனே
வேல் கொண்டு தேவரை காத்தவரே
தமிழ் மறைக் கடவுளே எங்களூர் பதியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதிக் கண்ணகி அம்மன் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தரும் கண்ணகி அம்மன்

பத்தினித் தெய்வமாய் பாரெல்லாம் பரந்து
ஆரையூர் தனில் அமர்ந்து எம்மை காக்கும்
- கண்ணகி அம்மனே
கற்பூர நாயகியே கற்புக் கரசியே
பாலகன் துணை நிற்க தீராத குறைகள் தீர்ப்பாயே

திங்களின் தீபம் திசைகளெல்லாம் பரவ
திகட்டாமல் அருள் தரும் அருளொளியே
மடை பரவி பூசை செய்தோம்
பணி செய்து உன் வரம் வேண்டி நின்றோமே

நீதி உன் துணை நிற்க துணையாளனை காத்து
பக்திக்கு பதியூரிலே ஆதாரமாய் இருப்பவரே
கோயிலூரின் கோமதியே
தாமரை நாயகியின் சகோதரியே

மாந்தருக்கெல்லாம் மகராசியே
திசை கெட்டவர்களை நிலை கொண்டு காப்பவரே
நற்பதியூர் நாயகியே
சார்ந்து வந்தால் சேர்ந்து போகும் சோதியே

வேதனை கொண்டு தேடி வந்தால்
சோதனை தராத சோதியரே
பத்தினி தெய்வமாய் ஆரையம்பதியிலே நிலை கொண்டு
எமையெல்லாம் காத்தருளும் தாயே
- கண்ணகியம்மனே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆரையம்பதி அரசடிப் பிள்ளையார் ஆலயம்



ஆரையம்பதி ஆற்றங்கரை பிள்ளையார் ஆலயம்




## ஆரையம்பதி திருநீலகண்ட விநாயகர் ஆலயம்




ஆரையம்பதி திருநீற்றுக்கேணி பிள்ளையார் ஆலயம்



ஆரையம்பதி சமாதடிப் பிள்ளையார் ஆலயம்



ஆரையம்பதி எள்ளுச்சேனை பிள்ளையார் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர்

அருள் தரும் நாதா திருநீலகண்ட விநாயகா
திரு மறை காக்கும் எங்கள் குணநாதா
விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வர பெருமானே
இத்தலம் காக்கும் எங்கள் முதற்கடவுளோனே

எழுந்து விரைந்து வா எள்ளுச்சேனை பிள்ளையாரே
எங்கள் குறைகள் எல்லாம் தீர்ப்பாயே
துன்பங்கள் தீர்க்கும் தும்பிக்கையானே
நிழற் குடையாய் நித்திலமெல்லாம் நிறைந்தவரே

நிறைவளம் பெருக திருநீற்றுக்கேணியில் உறைந்தவரே
நிறை செல்வம் குறையாமல் அருள் தருவாயே
இன்னல் தீரக்க எழுந்து வா இறையோனே
தொல்லைகள் எல்லாம் அறுத்தெறி தொந்தி- வயிறோனே


அருள் கொண்டு நோய் தீர்க்க ஆற்றங்கரையில் - அமர்ந்தவரே
ஞானப் பழம் பெற்ற நாயகனே
கணங்களுக்கு தலைவா கணபதியே
பாரெல்லாம் பார்வையால் காப்பாயே

ஆறாத் துயர் நீக்கும் அரசடிப் பிள்ளையாரே
அறுகம்புல்சந்தனம்உன்னுருவல்லவா ஏகநாதன் - மைந்தனே
சாதுவாய் எம்மை காக்கும் சமாதடிப் பிள்ளையாரே
ஆரையம்பதியூருக்கு நிறைவாய் அமைவாயே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி சிவனேஸ்வரர் ஆலயம்



# ஆரையம்பதி வம்மிக்கேணி சிவனேஸ்வரர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பக்கம் சிவபெருமான்

கைலாச நாதா சிந்து வெளி ஈசா
பதியூர் பதியோனே செல்வாநகர் பெருமானே
பலமூர்த்தம் கொடுத்து மாந்தரை வாழ வைப்பவரே
மங்காப் புகழ் எங்களூர் நாயகனே

கடலுடன் சூழ்ந்த பெருமானே
சுமையுடன் கூடிய மக்களை காப்பாயே
முக்கண் கடவுளோனே முப்புரங்கள் எரித்தவரே
முக்திப் பேற்றை மாந்தருக்கு வழங்குமையா

ஆதிசிவனாய் வம்மிக்கேணி அருகில் அமர்ந்தவரே
பாங்குடனே எம் மக்களைப் பார்ப்பாயே
அருள் தரும் நேச குகநேச தகப்பனே
பேரிருள் நீங்க ஒளி அருள் தருவாயே


தேர்தனில் தேசம் புகழ வலம் வரும் தேரோனே
திசை தடுமாறும் மக்களை தரிசிப்பாயே
பிறை சூடி கங்கையை சடையில் வைத்த கங்காதரனே
பின்னால் வரும் தொல்லைகளை அறுப்பாயே

எங்கள் தேசத்தில் முழு முதல் நாயகா
ஆரையம்பதியின் முதற்கண் பரம்பொருளே
திரு நீல கண்ட திங்களே
எம் ஊருக்கு அருளொளியை வழங்குமையா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஆரையம்பதி வடபத்திரகாளி அம்மன் ஆலயம்



## ஆரையம்பதி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்



## ஆரையம்பதி பத்திரகாளி அம்மன் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமித் தாயாய் காளி அம்பாள்

பதியூர் பொய்கையிலே தாமாக வந்தமர்ந்து
தயவாய் மாந்தருக்கு துணையாய் இருந்து
வீரத்தின் சிகரமாய் எம்மை காக்கும்
ஆரையூர் அன்னை வீரமாகாளியே

பௌர்ணமித் தாயாய் வீரமா காளி
வீரத்துடன் வீற்றிருந்து
சிம்மவாகினியாய் எழுந்தருளி
எம் பவனியை காக்கும் பவானி தேவியே

செல்வாநகருக்கு தென்கிழக்கில் பத்திரகாளியாய்
கடற்கரையோரமாய் எம்மை காக்கும் கனகவல்லியே
ஆல்,அரசு,கொன்றை,வேம்பு உனக்கு நிழல்
நீயோ ஆரையம்பதிக்கே நிழல்

ஆரையூர் தன்னிலே வட பத்திரகாளியாய்
பதியூர் மாந்தர் உனை வணங்க
அனுதினமும் அருள் வழங்கும்
அம்மையே சிவனின் பாதியே


சமவுடமை வாதி பாரதி துணை நின்றாற் போல்
சங்கரனில் சரி பாதியாய் சேர்ந்தாற் போல்
ஏங்கித் தவிக்கும் ஏழைகட்கு எளிதாய் இருந்தாற் போல்
ஆரையம்பதி மாந்தருக்கு மாதாவாய் இருந்து

- காப்பாயம்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதி ஸ்ரீ பெரிய பரமநயினார் ஆலயம்



## ஆரையம்பதி ஸ்ரீ கல் வீட்டுத்திண்ணையடி பரமநயினார் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாங்குடனே பரமநயினார்

அரிகரன் புதல்வனுமாகி
அருள் தரும் ஐயப்பனுமாகி
ஆரையூர் தனை காக்கும் அரசனுமாகி
நிலை கொண்டு வினை தீர்க்கும் பரம நயினாரே

மாந்தர் அச்சம் நீக்கும் பேரோளியுமாகி
அனுகுவோர்க்கு அனுக்கிரகம் வழங்கும்
-தூயவனுமாகி
நம்பினோர் நலம் காக்கும் நாயகனுமாகி
கல்வீட்டுத் திண்ணையடி பரமநயினாரே

வாவிக் கரையோரமாய் வடக்கு திசையில்
எல்லை கடவுளாய் நீயும் இருக்க
உமை நாடி வந்தோருக்கு தேடி வரம் கொடுக்கும்
ஆனி உத்தர தீர்த்தோற்சவ பரமநயினாரே


நாதம் எல்லாம் உன் பெயர் சொல்ல
காரிருளிலே வருவோரை வீடு போய் சேர்க்க
பின் தொடர் காவலனாய்
பேரிரைச்சலுடன் வரும் பரமநயினாரே

பூக் கொண்டு மாலையாய் உனக்கணிய
புண்ணியம் சேர்க்கும் நாதனே
சொல் கொண்டு பாமாலையால் உன் புகழ் பாட
ஆரையம்பதி ஆர்வலர்களை உன் துணையால்
- காப்பாய் ஐயனாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதி ஸ்ரீ ஆலையடி ஆதி வைரவர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமூர்த்தமாய் வைரவர்

ஆதிவைரவர் ஆலையடிதனில்
ஆரைநகர் தேடி வந்து
ஞான வைரவராய் காட்சி தந்து
எமைக் காக்கும் வைரவப் பெருமானே

மனையெல்லாம் மாந்தருக்கு அருள் புரிய
சர்வம் சக்தி மயமாய் அவதரித்து
அந்தி வைரவராய் காட்டும் கோலமே
பெருங் கோலம் எம் ஆரையம்பதிக்கு

ஆயிரம் கோடி ஒளிச்சுடர் உன் திருமுகம்
ஆரையூர் அந்தி வைரவரே
வினை தனை களைந்து வீடு தோறும் காவலாய்
கேடுகள் அணுகாமல் எமை காக்கும் காலை - வைரவரே


பதியூர் தெற்கே காவற்காரனாய்
ஜெகம் புகழும் மாலை வைரவனாய் ஜெயித்து
அஞ்சா நெஞ்சம் கொண்ட தேசிகனாய்
எம் தேசியத்தை உன் அருளால் காப்பாயையனே

அட்டமா சித்தி பெற்ற வித்தகனே
உன் அடியை போற்றுகிறோம் சந்தி வைரவா
துன்பத்தில் துவண்டோரை இன்பத்தில் ஆழ்த்துவாயே
நினைத்தால் அனுகூலம் உனை துதித்தால்
- வாழும் எம் குலம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதி வம்மிக்கேணி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம்



## ஆரையம்பதி செங்குந்தர் வீதி ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகமாயி மாரியம்மா

அருள் மழை பொழியும் கொடையே மாரியம்மா
ஆரையூர் காக்கும் ஆதாரமே மகமாயியம்மா
தங்கக் கொடையே தாயுள்ளம் கொண்டவளே
நீ பெரும் சோதியம்மா

வம்மிக் கேணிதனில் அமர்ந்த அமராவதியே
ஊருக்கு இறையருள் தாரீயம்மா
ஊலகமெல்லாம் உதித்தவளே
உனக்கு ஊரெல்லாம் கோயிலம்மா

பாரெல்லாம் பதியாய் பரந்தவளே
திரிசூல திரிபுர நாயகியே பதியூர் உன்னூரம்மா
விழி திறந்து விக்கினங்கள் தீர்ப்பவளே
வெண்ணிலவு உன் அழகு ஆரையம்பதிக்கே நீயழகு


அன்னையே ஆரை நகர் காக்கும் ஆகாயமே
நீங்கள் தானே தரணிக்கே முத்தழகம்மா
நிறையுள்ளமெல்லாம் நிறைந்த நிழற்குடையே
சொல் கொண்டு உன் புகழ் பாட
- வார்த்தையில்லையம்மா

திரு நீல கண்ட விநாயகருக்கு நிழலாய் இருப்பவளே
மாந்தருக்கெல்லாம் நீயே மகராசியம்மா
மகமாயி மாரியம்மா அன்னபூரணி அங்காளம்மா
உன்னூர் பிள்ளைகள் குறை தீர்ப்பாயம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளயத்து பேச்சியம்மன்

பேச்சியம்மன் ஆட்சிதனை ஏற்று வாழும்
மாந்தருக்கெல்லாம் மகாதேவியாய் அருள் பாலித்து
அருட் கடாட்சம் தரும் ஆதிமூலமே
ஆரையூர் அஷ்டலட்சுமி எம்மவரை ஆதரியுமம்மா

குழல் ஊதும் கண்ணன் காட்சி கண்டு
குழுமியவர்கள் தீபாராதனை செய்து
சிறுபிள்ளை ஆடிய நடனம் பார்த்து இடம் குறித்து
கும்பிட்டு கோயில் கொண்டெழுந்த பதியூர் உறை
- நாயகியே

நல்லருளை எமக்களித்து நல்லமைதி தர
நாங்களெல்லாம் ஒன்று கூடி பணி செய்ய
அல்லல் அகன்றிட உன்னடியில் நாமிருக்க
மனதெல்லாம் மகிழ வைக்கும் மனோன்மணியே

எண்ணமெல்லாம் உன் பெருமை நிலைத்திட
உலகமெல்லாம் உன் நாமம் ஒலித்திட
ஓங்கார உரு தரும் ஓங்காரியே
இக் குலத்தோர் வாழ எக்காலத்திலும் இருப்பாயே


ஆறுதலை எமக்களித்து எள்ளுச்சேனைபிள்ளையார் கூட
-இருந்து
ஆரையூர் மக்கள் மனதெல்லாம் நிறைய வைத்து
வல்லமை தந்து மனதெல்லாம் மகிழவைத்து
ஆதாரமாய் நல்லருள் அருள் தரும் அம்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி கடற்கரை ஸ்ரீ நரசிங்கர் ஆலயம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியூரன்

# அவதார புருஷ்சராய் நரசிங்கர்

அழகுற கடற்கரையில் அவதார புருஷனாய்
ஆரையம்பதிக்கு பெரும் பதியாய் அவதரித்து
ஆன்ம ஈடேற்றத்திற்கு உறுதுணையாய் இருந்து
மாந்தருக் கெல்லாம் மாவீரனுமானாயே நரசிங்கப்
-பெருமானே

தூணிலும் துரும்பிலும் இறையோன் உறைவானென்று
காட்டிட புண்ணிய பெருமான் புயலாய் வந்து
இரணியன் இதயத்தை பிளந்து
பிரகலாதன் பக்தியை உலகிற்கு நிலை நாட்டிய
- பெருமானே

எழுந்து வரும் சூரியன் உன்னொளியாய் நிற்க
நீயே ஆரையம்பதிக்கு பேரொளியாய் நின்று
பதியூர் கிழக்கே காவல் நாயகனாய்
எமை காக்கும் வாரணமாயிரம் வென்ற வாமனே


ஆண்டவனாய் எமை ஆட்சி செய்யும் ஆதிமூலமாய்
விண்ணுலகம் போற்றும் மண்ணுலக நாயகனாய்
கிருஷ்ண லீலையாய் நரசிங்க அவதாரமாய்
எம் கோயிலூரை காக்கும் கோயிலானே

ஆழிதனில் பாம்புதனை படுக்கையாய் ஏற்று
நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும்
பல வடிவுதனை எடுத்து தரணியில் உள்ளோரை
இருள் நீக்கி ஒளி தரும் நரசிங்கப் பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதி ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்தின் சிகரம் ஆஞ்சநேயன்

ஆஞ்சநேயனே ஆரையூர் ஆஞ்சநேயனே
இராமனின் பக்தன் ஆஞ்சநேயனே
தோள் கொண்டு சிரஞ்சி மலையை தூக்கிய வீரனே
ஆரையமபதியூர் காக்க இராஜதுரைக்கிராமத்தில்
- அமர்ந்தவரே

சமுத்திரத்தை அமுதமாய் அருந்த எண்ணியவரே
கடலுக்கே பாலம் போட்டவரே
வீரத்தின் சிகரம் ஆஞ்சநேயனே
எம் மக்களுக்கு தலைவனும் ஆஞ்சநேயனே

சீதைக்கு கணையாளி தேடிக் கொடுத்தவரே
சீர் கொண்ட நிமிர்ந்த தோற்றம் உள்ளவரே
வானரப் படையின் வானுயர்ந்த தலைவனே
வாருமையா பேரருள் தாருமையா ஆஞ்சநேயனே


போர்தனில் பெரும் வீரனும் ஆஞ்சநேயனே
மாந்தருள்ள மெல்லாம் நிறைந்தவரே
உன் பக்திக்கு இணை வேறுயாருமில்லை
உன் போல் எமக்கு எவருமில்லை ஆஞ்சநேயனே

மனதிலே மாயக் காரனை சுமந்தவரே
கோதை சீதையுள்ளம் குளிர வைத்தவரே
ஜெகம் எங்கும் நிறைந்தவரே
இராமன் புகழ் பாடும் ஆரையூர் ஆஞ்சநேயனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தருளும் நாகதம்பிரான்

காத்தருளும் நாகதம்பிரானாய் ஆரையம்பதியிலே
கோயில் கொண்டெழுந்த நாகராஜாவே
இராஜதுரை கிராமத்திற்கு நிலையாய் நீயிருந்து
ஆரையம்பதியார்களை காவல் செய்து காப்பவரே

கடல்தனில் பகவானுக்கு படுக்கையாய் இருந்து
நாகங்களுக்கெல்லாம் ராஜாவாய் ஆட்சிசெய்து
பதியகங்களெல்லாம் தெய்வமாய் நிறைந்து
கடவுளோர்க்கெல்லாம் காவலாய் நின்ற
- நாகதம்பிரானே

வாசுகி நாகமாய் தெய்வ வடிவுதனை எடுத்து
வணங்குவோர்க்கு வாழ்வுதனை அழித்து
சிவன் கழுத்தில் ஆபரணமாய் அமைந்து
மாந்தரெல்லாம் ஆராதனை செய்யும் ஆதி சேடனே


தாழம் பூ தனை அடையாளமாய் கொண்டு
மந்திர மலையை கடைய நாணாக இருந்து
அதிபதியாய் பதியூரில் உறைந்து
எங்கும் வியாபித்திருக்கும் நாகதம்பிரானே

ஐந்து தலை நாகமாய் குழந்தை கிருஸ்ணனுக்க
- குடைபிடிக்க
காட்சி தந்தாய் காளிங்க நாகமாய் மக்களுக்கு
பிடித்த பிணிகளை அழித்தெறிய
கோயில் கொண்டாய் கோயில் நிறை ஊரிலே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரையம்பதி ஸ்ரீ கோபாலகிருஸ்ணர் ஆலயம்



## ஆரையம்பதி கயிற்றுச் சங்கத்தடி ஸ்ரீ விஷ்ணு ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழல் ஊதும் கண்ணன்

குழல் ஊதும் கண்ணனாய் எம்மையெல்லாம்
கருணை செய்யும் கருணைக் கடலே
கார் மேகமாய் எமைபிடித்த வினை இருக்க
அருள் தந்து எமைக் காக்கும் சுடரொளியே

கயிற்றுச் சங்கத்தடியில் சங்கமித்து
ஓம் நாராயணனாய் உதித்தவா
உன் லீலையே பார் காக்கும் அவதாரம்
நீயோ ஆரையூர் காக்கும் ஓங்காரம்

ஒளி தரும் சுடர் உன் வடிவம்
உலகிற்கே நீ அருள் வடிவம்
கோபால கிருஸ்ணராய் பிரதான வீதியில் நீயிருக்க
உம்மை தேடி வணங்க வந்தோமையனே


அரியுடன் சேர்ந்த கரனுமாய்
இருவரும் சேர்ந்த அரிகரமூர்த்தமுமாய்
பக்தியுள்ளமெல்லாம் நிறை கடவுளுமாய்
எம்முடன் இருக்கும் வைகுண்ட நாதனே.

மாந்தரை வாழவைக்கும் வள்ளலுமாய்
ஆரையம்பதியை காக்க வந்த காவலனுமாய்
மனித குலத்தோடு ஒன்று சேர்ந்த இறைவனுமாய்
அவதாரம் தந்த ஆரையம்பதி பெரும்பதியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரையம்பதி பிரதான வீதி மதுரை வீரன் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுதரும் மதுரை வீரன்

காலதனைப் பதித்து காத்தருள் மதுரை வீரனாய்
        காவல் செய்ய குதிரை வாகனத்தில் அமர்ந்தவரே
பூசைசெய்து நாம் வணங்கி நிற்க
        ஆரையம்பதி பிரதான வீதியில் பிரதானமாய்
                - அமைந்தவரே

வாள் கொண்டு காட்சி தந்து
        மீசை முகத்தோடு நல் லெழுச்சி தந்து
வீரனாய் விக்கினங்கள் தீர்க்க வந்து
        பேரலையாய் ஜெயித்து நிற்கும் மதுரை வீரனே

உமைப்பார்த்த கண்கள் வீரத்தோடு
        கையெடுத்து வணங்கி நிற்க
நீயோ ஊர்காக்கும் வீரனாய்
        ஜெகமெங்கும் நிறைந்து நின்றாய்

உன் வீரம் கண்டு ஆடவரும்
        உன் அருள் கண்டு மங்கையரும்
உன் புகழ் பாடி ஓடிவந்து வணங்க
        நீ காட்டும் வீரக் கோலமே மதுரை வீரன் கோலம்

நற் றமிழோடு பண்பாடும் நிறை ஆரையம்பதி
        ஆலயங்கள் நிறையூராய் நிற்கையில்
நீயும்மொருவனாய் பதிந்து இருக்கையில்
        பதியூரின் அழகே பெரும் அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடி மரபும் திருவிழாக்களும்

தைமாதம் கனிந்தால் காத்திருந்து
புலவனார் குடிமக்கள் ஒன்று சேர்ந்து
பூசத் தன்று குமரோனுக்கு திருவிழா எடுத்து
இறையோன் வெளி வீதி வரும் காட்சியே- பெரும் காட்சி

மாசி மாதம் மலர்ந்தால் வந்தோம்
வங்காளக் குடிமக்கள் சேர்ந்தொன்றுகூடி
மாசிமகத் தன்று வடிவேலனுக்கு அபிஷேகம் செய்து
தீபம் காட்டும் ஆராதனையே பெரும் ஆராதனை

பாங்குடனே முதலித்தேவன் குடிமக்கள்
பங்குனி உத்தர திருவிழாவை ஏற்று
பாலகனுக்கு பூசை எடுத்து
முத்தின்பம் கிடைக்கும் பேறே பெரும் பேறு

சித்திரையில் இந் நித்திலத்தில் வீரமாணிக்க குடிமக்கள்
வீரமாய் எழுந்து விரைந்து வந்து வினைகளை- போக்க
வருடப் பிறப்பு திருவிழாவில் ஆனைமுகன் தம்பி
- ஆறுமுகனுக்கு
பூசை செய்யும் பாக்கியமே அவர்கள் பெற்ற
- பெரும் பாக்கியம்

ஆரையூர்தனில் அமர்ந்த வேலவா
திருவிளங்கு குடிமக்களின் திருவிழா - உனக்கல்லவா
ஆனி உத்தரத்தில் மயிலேறி வந்து
நீ காட்டும் சோதியே பெரும் சோதி ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமாதம் தேடி வந்து அருள் புரிய
பத்தி நாச்சி குடி மக்கள் திருவிழா எடுக்க
ஆடிப் பூரத் தன்று ஆறுமுகத் தோடு
வினை நீக்க துணை தரும் ஒளியே பேரொளி

ஆறுபடை வீடு கொண்ட ஆனைமுகன் தம்பி - ஆறுமுகனே
ஆவணியிலே அலரித்தேவன் குடிமக்கள்
-உன்னை அலங்கரித்து
ஆவணி மூலத் திருவிழாவில் அவனியில் உள்ளோர்க்கு
நீ தரும் கருணையே மாபெரும் கருணை - மாந்தர்க்கு

மனதெல்லாம் மகிழ்ந்திட மகோற்சவம் முருகனுக்கு
புரட்டாதி மாதத்தில் தீர்த்தம் பூரணையில்
மக்கள் பாகையாய் பலவராய் பிரிந்து பணி செய்ய
பதியூர் காக்க துணை நிற்கும் உற்சவமே - மகோற்சவம்

சூரனை அடக்கி அருள் தந்த கந்தசஷ்டியில்
ஆறுகாட்டி குடிமக்கள் ஐப்பசி மாதத்தில்
வலம் வந்து முருகன் சூரனை வதம் செய்யும்
ஆறுமுகக் கோலமே பெரும் கோலம்

கார்த்திகேயனுக்கு கார்த்திகை மாதம்
மன்றிலாடி குடிமக்கள் துதித்து மன்றாட
திருக்கார்த்திகை திருவிழாவில்
அவர் தரும் அருளே பேரருள்.

சண்முகனே சரவணனே சக்தியின் மைந்தனே
பால விக்கிரம சிங்க குடிமக்களின் பாலகனே
மார்கழி மாதம் திருவாதிரையில்
வீரவேல் துணை கொண்டு நீ காட்டும் வழியே
- பெரும்வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை தந்திட வந்தருள் புரியும் வல்லவரே
புரட்டாதி மாத மகோற்சவத்தில் சம்பான் ஒட்டி மக்களின்
சப்புறத்தில் பக்த துணையாய் மூர்த்திகளோடு வந்து
நீ தரும் இன்பமே பேரின்பம்

திரு மறை காக்கும் தமிழ் மறையோனே
திகட்டாமல் அருள் தரும் மகோற்சவத்தில்
தேரிழுக்க வேளாளர் குடி மக்கள் வந்திழுக்க
முருகோன் காட்டும் தரிசனமே பெரும் தரிசனம்

வைகாசி மாத கண்ணகை அம்மன் வந்து விட்டால்
வளமெல்லாம் கொழிக்கும் ஆரையூர்தனில்
பொன்னாச்சி குடிமக்கள் கட்டாடிமாராய் பரம்பரையாய்
- கிரியை செய்ய
அம்பாள் தரும் நிறைவே மனதிற்கு பெரும் நிறைவு

அருள் தரும் காளியாய் வடபத்திர காளிக்கு
பொன் தொழிலாளர் குடிமக்கள் பொறுமையாய்
- பூசை செய்ய
தேடி வந்து கருணைக் கடலாய் எமைக் காக்கும்
காளித் தாயின் பெருமையே பெரும் பெருமை

பள்ளயத்து பேச்சியாய் பதியூரில் அமர்ந்தவளே
பணிக்கர் குடிமக்கள் உன்னருள் வேண்டி நிற்க
நீயும் எள்ளுச் சேனைப் பிள்ளையாரும் சேர்ந்து
எமக்குக் காட்டும் அன்பே பேரன்பு

செழுமை நிறை செம்பதி ஆரையம்பதியிலே
திருநீல கண்ட விநாயகருக்கு அனுதினமும்
ஆர்வமுடன் செங்குந்தர் குடிமக்கள் ஆராதனை செய்ய
விக்னேஸ்வரர் அழிக்கும் அருளே பேரருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் ஆளும் அம்மனாய் மாரியம்மன்
வாழ வைக்க பதியூரிலே வந்துறைந்து
மாரியம்மன் பகுதி குடிமக்கள் மனம் நிறைந்து பணி செய்ய
அம்மன் தரும் கொடையே பெரும் கொடை

ஆரையம்பதியிலே பல குடிமக்கள் பரவி நிற்க
சிந்தனைத் துடிப்போடு சிறப்பினா குடியோடு குரவர்
- குடிமக்களும்
கந்தன் கருணையோடு கணபதியார் குடிமக்களும்
நிலையாய் நிலைத்து வாழ்வதுமே ஆரையம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூத்துக்கலையும் ஆரையம்பதியும்

பன்னூறு ஆண்டுகள் கவின் கலையாயை
ஆரையம்பதியூரார் ஆர்வத்தோடு கூத்தாட
ஆனந்தக்களிப்பில் ஆனந்தமாய் இருக்க
பெருங்காட்சியாய் நிறைந்து நின்றதுவே -கூத்துக்கலை

வட்டக்களரி கட்டி வாடாத மொட்டுக்களாய்
துடிப்போடு இராம நாடகம் கூத்தாய் ஆட
குமிந்தவர்கள் எழும்பாமல் பார்த்து நிற்க
அந் நாள் கூத்தின் சிறப்பே பெரும் சிறப்பு

களரி கட்டி மத்தாளம் தட்டி கூத்தாடி
பார்ப்பவரெல்லாம் வியந்து நிற்க
இறை துணையோடு இசைகொண்டு ஆடிய கூத்து
கண் கொண்டு பார்க்க தேனாய் இனித்தது

பாரோர் போற்றி நிற்க வாளபி மன்னன் கூத்தும்
சாய்ந்து கொண்டு பார்க்க சயந்தவன் நாடகக் -கூத்தும்
பார்ப்பவர்கள் மனம் திறக்க பப்பரவாகன் நாடகக் கூத்தும்
மகிழ்ச்சி தரும் மங்காத ஒளியாய் பதியூரில் - மலர்ந்தது

சந்திர வெளிச்சமாய் சந்திரகாச நாடக கூத்தும்
வாழும் கலையாய் வள்ளி நாடகக் கூத்தும்
சகோதர பாசமாய் தரும புத்திர நாடகக் கூத்தும்
சிரிப்போடு சிந்தனையும் மதி தரும் அழகாய் -இருந்தது

வடமோடி தென்மோடி மரபாய் கூத்தாட
வரிந்து கட்டி கம்பீரமாய் எம் ஊரவர் ஆட
ஆரையம்பதிக்கே ஆறுதலாய் சுபத்திரா கல்யாண கூத்து
சுகம் தரும் சுவாசமாய் நிலையாயிருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவசம் உன்வசம் கூத்துக்கலையே தமிழர் வசம்
நெடுங்காலமாய் நேர்த்தியாய் ஆடும் கூத்து மக்கள் -வசம்
ஆழிதரும் அழகு பேரலை வியப்புத்தரும்
ஆரையம்பதிக்கே கொடைகவின் கலையாய்
-கூத்துக்கலை

புறத்திணை தமிழர் வீரம் போற்றி நிற்க
சொல் கொண்டு புனைந்த கூத்துக் கலையை
- வியாபித்து
பதினேழாம் பதினெட்டாம் போர் கூத்தாய் ஆடி நிற்க
தமிழர் வீரம் தரணியிலே உள்ளோர்க்கு பெரு
- முழக்கமாய் நின்றது

வினைதீர்க்கும் விநாயகனை முன்னிறுத்தி
ஏகாவடம், நாகபடம், வில், வேல் சக்கரம்
அலங்காரமாய் அணிந்து ஆடும் அலங்கார ரூபன் கூத்து
ஆரையூர் மக்களுக்கு ஆனந்தமாய் ஆர்ப்பரித்தது

தண்டாயுதம் முடி கிரீடம் விசிறி சப்புறம் பூட்டி
சளைக்காமல் வளைந்து ஆடும் குசலவ கூத்து
மார்தட்டிச் சொல்லும் மார்க்கண்டேயர் கூத்தும்
சொல் நிறை வால் தன்னிறைவு பெற்ற கூத்தாய்
-இருந்தது.

அல்லி நாடக கூத்தை துள்ளி ஆட
பார்ப்பவர்கள் ரசித்து நிற்க
சிறு தொண்டர் கூத்தையும் சிறப்பாக ஆட
ஆரையம்பதியில் அரங்கேறியது பல கூத்துக்கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரையம்பதியும் ஆயுர் வேத வைத்தியமும்

அகத்தியர் அகம் திறந்து அறிவு தந்த
வைத்தியத்தை ஆரையம்பதியார் கற்றுத் தெளிய
உபவேதமாய் ஆயுர்வேதம் முதன்மையாய் இருக்க
ஆயுர் வேத வைத்தியத்தில் சிகரமாய் நின்றதுவே
- பதியூர்

சான்றோர் தந்த அறுபத்தினான்கு கலைகளுள்
நல்வாழ்வு வாழ வைக்கும் கலையாய்
சிரசு முதல் பாதம் வரை அங்காதிபாதமாய் நூலின் அறிய
பரிகாரம் செய்யும் பரிசாரிமார் நிறைந்து நின்றதுவே
- பதியூர்

புல், பூண்டு, செடி, கொடியை சாறாய் எடுத்து
நல்ல நேரம் பார்த்து இறைவனுக்கு பூசை செய்து
இறையருளோடு நல் மருந்தை உருவாக்கி
பிணி தீர்க்கும் வினையாய் ஆயுர் வேத வைத்தியம்
- வளமாய் நின்றதுவே

தேடி வந்தோர்க்கு நாடித்துடிப்பறிந்து
நல் வார்த்தை கூறி நோய் தீர்த்து
தமிழர் சொத்தாய் எங்கும் நிறைந்து
வேதனை தீர்க்கும் வேதமாய் ஜெயித்து நிற்பதுவும்
- ஆயுர் வேத வைத்தியம்

சித்தர் பலர் தோன்றி முன்னோடியாய்
சித்த வைத்தியத்தை சீராய் தர
தானாய் முன்வந்து பரிசாரிமார் ஏற்க
ஆரையம்பதியும் ஆயுர்வேத சித்த வைத்தியமும்
-நிறைந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதியூரன்

# ஆரையம்பதியும் திருமந்திரமும்

அதர்வண வேதத்தில் அநாதியாய்
கடவுளுக்கெல்லாம் உச்சாடனமாய்
நினைப்பவரை காக்கும் திருமந்திரமுமாய்
ஆரையம்பதிக்கே நிறைமொழியாய் அமைந்தது

எழுதாமறையாய் மனதிலே உதித்து
பாரத நாட்டின் மலையாள தேசத்தில் எழுந்து
மட்டக்களப்பில் திருமந்திரமாய் பரவி
ஆரையம்பதியே மந்திரத்தின் விளைநிலமாய்
-இருந்தது.

ஆகம முறை சாரா கிரியைகளில்
மடை பரவி கும்பம் வைத்து பூசிக்கையில்
யந்திரங்களும் அட்சரங்களும் ஒன்று சேர்ந்து நிற்கையிலே
முழுச்சக்தியாய் ஆரையம்பதிக்கே திருமந்திரம்
- பரிணமித்தது.

கட்டாடிமார் சடங்கு செய்யும் தருணத்தில்
அம்மனை அழைத்து கும்பத்தில் நிறுத்தி
அருள் தரும் சக்தியாய் அம்மன் இருக்கையிலே
தேடி வரும் வினைகளெல்லாம் ஓடி விடும்
- திருமந்திரத்தால்.

அறுகோண சக்கரத்தில் சக்தியாய் அமர்ந்து
திரிலோகத்து சிவன் திரிசூலமாய் காட்சி தந்து
நன்மை தரும் திருமந்திரத்தை பூசகர் ஓதுகையிலேயே
ஆரையம்பதியும் திருமந்திரமுமாய் கலந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பதியாய் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர்

உலக நாச்சி ஆட்சிதனில் தான்தோன்றிய லிங்கமாய்
கொக்கட்டி விருட்சத்தில் வினைதீர்க்கும் கடவுளாய்
வயலோடு நதிபாயும் அழகு நிறை படுவான் கரையிலே
கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரராய் காட்சி
- தருபவரே

தேசத்துக் கோயிலாய் நாடிவந்து நாம் வணங்க
ஆரையம்பதியார் வேல் கொண்டு வடம் பூட்ட
தான்தோன்றீஸ்வரர் பார்வதி அம்பாள் தேரில் வர
அருட்கடாட்சத்தை மழையாய் பொழியும் பெரும்
- பதியானே

போர்த்துக்கேயர் தளபதிக்கு பாடம் புகட்ட
கல் நந்தி புல் உண்டு சாணம் போட
அரும் பெரும் காடசிதனை அழிக்கவந்தவனுக்கு காட்டி
உலகுக்கோர் பாடம் புகட்டிய தான்தோன்றீஸ்வரரே

அருவுருவ அத்துவித வடிவாய் சுயம்புலிங்கம்
கிழக்கிலங்கையை சிகரமாய் காத்து நிற்க
தேரில் வந்து சோதியாய் காட்சி தரும் தான்தோன்றீஸ்வரரே
வாருமையா உன்னருள் அடியார்க்கு வழங்குமையா

ஆவணி மாதத்து ஞாயிறுவாரத்திலே எம்பெருமான்
மகோற்சவ நாயகனாய் கொக்கட்டிச் சோலையிலே
குளக்கோட்டன் கட்டிய பதியிலே குறைதீர்க்க
பெரும்பதியாய் எமைக்காக்கும் ஒளியாய் நின்றாய்
-தான்தோன்றீஸ்வரே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் வேண்டி இறைவனோடு

சமாதானம் வேண்டி நானும் இறையோனை
நெருக்கமாய் வணங்கி நிற்கையிலே
வேதனையை எம்மவர்க்கெல்லாம் தீர்ப்பாயென்று
மனதிலே கவிவரியை பாமாலையாய் சுமத்துகிறேன்

தரணியெல்லாம் பதியகங்களை பதித்து வணங்குகிறோம்
பார்வையால் பதி தம்மை பார்ப்பாரென்று
பாரெல்லாம் பரந்து பரவியிருக்கிறோம்
எம்மவர் குறை தீர்த்து சமாதானம் வழங்குவாரென்று

சிவன் சக்தியாய் பல மூர்த்தமாகி
உலகைக் காக்க உதித்தவர்களே
எம் குலம் தழைத்து வாழ இரங்குகிறோம்
வரம் தந்து சமாதானம் தாருமையனே

நினைவலையெல்லாம் உன்னலையாய் எழ
உதித்தெழுந்து உள்ளமெல்லாம் உறைந்தவர்களே
உருக்குலைந்து வாழும் எம்மவர்க்கு
உங்களருள் தந்து சமாதானம் தாருமையனே

நாங்களெல்லாம் நமச்சிவாயவென ஓத
கரங்களெல்லாம் ஓம் சக்தியென வணங்க
கண்களெல்லாம் உன் திருமுகத்தைப் பார்த்து நிற்க
இருள் நீக்கி எம்மவர்க்கு சமாதானத்தை
- தாருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி

கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் நித்திலமாய் விளங்கும் மண்முனைப்பற்றிலே ஆலயங்களும், கல்விமான்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும்நிறைந்து காணப்படும் பழம் பெரும் பதி ஆரையம்பதியிலே திரு.கதிரேசப்பிள்ளை சந்திரசேகரம், திருமதி.தனலெட்சுமி சந்திரசேகரம் தம்பதிகளின் இளைய புதல்வனாக 1984.05.20 இல் மலர்ந்தேன்.

சந்திரசேகரம் ஜெயந்தன் ஆகிய எனக்கு கலை இலக்கியத்தில் ஆர்வம் வரக் காரணமாக அமைந்தவை ஆரையம்பதியிலே இ.கி.மி மகா வித்தியாலயத்தில் அரங்கேறிய "குந்தியின் மடியில்" என்ற நாடகத்தில் "வீமனாக" கதாபாத்திரம் ஏற்று நடித்து என் நடிப்பாற்றலுக்கு உந்து சக்தியாக அமைந்தது. பல பொது மேடைகளில் "குந்தியின் மடியில்"எனும் நாடகம் மக்களின் வரவேற்பையும் பெற்றது. அதுமட்டுமல்லாது பாடசாலை மட்டத்தில்,பொது அமைப்புக்கள் நடாத்தும் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டி, விவாதப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசுகளையும் வென்றுள்ளேன். இந்த வகையில் கலை இலக்கிய பிரியனாய் மாறி இன்று இறைவன் துணைகொண்டு எனக்குள் சிறுவித்தாய் எழுந்த கவிவரிகளைக் கொண்டு பெருவிருட்சமாய் நூல் வடிவில் "ஆரையம்பதியும் ஆலயங்களும் " எனும் கவித் தொகுப்பு வெளியிடுவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

இந் நூல் வெளியீட்டிற்கு உதவி நின்ற பெற்றோருக்கும் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய, ஸ்ரீ கண்ணகி, ஸ்ரீ வீரம்மா காளி அம்மன் ஆலய பரிபாலன சபையினருக்கும் கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் பூ.பிரசாந்தன் அவர்களுக்கும், அனைத்து வழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும், என் நண்பர்களுக்கும், பழம்பெரும் கலைஞர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இந்த இளைஞனின் கன்னி முயற்சி வெற்றியளிக்க இறையருளோடு உங்களது ஆசியையும் எதிர்பார்க்கின்றேன்.

என்றும் உங்கள்
பதியூரான் சந்திரசேகரம் ஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org